Reg. No. | | | | | | |

## பத்தாம் வகுப்பு–காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் – 2017

நேரம் : 2.30 மணி) சமூக அறிவியல் (மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : 1. அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்து கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்

2. நீலம் அல்லது கருப்பு மையினை மட்டும் எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு : இவ்வினாத்தாள் ஏழு பிரிவுகளைக் கொண்டது

பிரிவு – I (மதிப்பெண்கள் : 24)

பகுதி – I $14 \times 1 = 14$

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பிரெஞ்சு கிழக்கிந்தியக் வணிகக் குழுவை நிறுவியவர்
அ) பதினான்காம் லூயி ஆ) காலபர்ட் இ) பதினாறாம் லூயி ஈ) டிபிராஸா
2. ஜெர்மனி பிரான்சின்மீது படையெடுக்க இதன் வழியாகச் சென்றது
அ) நெதர்லாந்து ஆ) லக்ஸம்பர்க் இ) ரைன்லாந்து ஈ) பெல்ஜியம்
3. பாசிசக் கட்சியை தோற்றுவித்தவர் அ) ஹிட்லர் ஆ) முசோலினி இ) ஸ்டாலின் ஈ) லெனின்
4. பிலிட்ஸ்கிரிக் என்றால் அ) மின்னல் போர் ஆ) பதுங்கு குழிப் போர்
இ) நீர்மூழ்கிக் கப்பல் போர் ஈ) கொரில்லாப் போர்
5. அணு ஆயுதத் தடைச்சட்டம் கையெழுத்தான ஆண்டு
அ) 1956 ஆ) 1963 இ) 1936 ஈ) 1976
6. தேர்தலில் போட்டியிடத் தகுதியான வயது அ) 21 ஆ) 18 இ) 25 ஈ) 35
7. மாநிலத் தேர்தல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்பவர்
அ) தலைமைத் தேர்தல் ஆணையர் ஆ) தலைமைத் தேர்தல் அதிகாரி
இ) உச்சநீதிமன்ற நீதிபதி ஈ) உயர்நீதிமன்ற நீதிபதி
8. உலகின் மிக உயரமான சிகரம்
அ) எவரெஸ்ட் சிகரம் ஆ) காட்வின் ஆஸ்டின் இ) கஞ்சன் ஜங்கா ஈ) தவளகிரி
9. கடற்கரை பகுதிகளில் நிலவுவது அ) கண்டக் காலநிலை ஆ) சமமான காலநிலை
இ) ஈரப்பத காலநிலை ஈ) வெப்ப காலநிலை
10. மோனோசைட் மணலில் காணப்படும் தாது
அ) எண்ணெய் ஆ) யுரேனியம் இ) தோரியம் ஈ) நிலக்கரி
11. வறட்சியிலும் வளரும் பயிர் அ) நெல் ஆ) கோதுமை இ) சணல் ஈ) தினைவகை
12. நாட்டு வருமானக் கணக்கீடு என்பது அ) மொத்த பணமதிப்பு
ஆ) உணவு தானிய உற்பத்தியின் மொத்த மதிப்பு இ) தொழில் பண்டங்களின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
13. தலா வருமானம் சுட்டிக்காட்டுவது அ) மக்களின் செல்வ நிலையை ஆ) மக்களின் ஏழ்மைநிலையை இ) மக்களின் வாழ்க்கைத்தரத்தை ஈ) மக்களின் கல்வி நிலையை
14. இந்திய நாட்டு வருமானத்தில் முதன்மைத் துறையின் பங்களிப்பு
அ) 15.8% ஆ) 25.8% இ) 58.4% ஈ) 12.8%

15. i) பொருத்துக பகுதி – II (இரு வினாக்களுக்கும் விடையளி) $2 \times 5 = 10$

| | | |
|---|---|---|
| அ) டியூஸ் | - | எப்.டி. ரூஸ்வெல்ட் 3 |
| ஆ) ஃப்பரர் | - | ஜீன் மானெட் 4 |
| இ) அட்லாண்டிக் சாசனம் | - | முசோலினி 1 |
| ஈ) பிரான்சு அரசியல் பிரமுகர் | - | லாயிட்ஸ் ஜார்ஜ் 5 |
| உ) பிரிட்டன் | - | ஹிட்லர் 2 |
| | - | ராபர்ட் ஸ்கூமன் |

| | | |
|---|---|---|
| ii) அ) கேரளாவின் பெரிய ஏரி | - | வேம்ப நாடு 1 |
| ஆ) அதிக மழைபொழியும் பகுதி | - | கேரளா 4 |
| இ) லிக்னைட் | - | கர்நாடகம் 5 |
| ஈ) ரப்பர் | - | நெய்வேலி 3 |
| உ) காபி | - | மாசின்ராம் 2 |
| | - | மேற்கு வங்காளம் |

பிரிவு – II (மதிப்பெண்கள் : 20)

குறிப்பு : i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறுவிடை தருக. $10 \times 2 = 20$

ii) பகுதி -Iல் நான்கு வினாக்கள், பகுதி– IIல் ஒரு வினா, பகுதி -IIIல் நான்கு வினாக்கள் மற்றும் பகுதி -IVல் ஒரு வினாவும் தேர்வு செய்க.

பகுதி – I

16. ஏகாதிபத்தியம் வரையறு.
17. முதல் உலகப்போரில் அமெரிக்கா ஈடுபட்டதற்கான காரணம் என்ன ?
18. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை ?
19. மியூனிச் உடன்படிக்கை சிறுகுறிப்பு தருக.
20 இரண்டாம் உலகப்போருக்கான உடனடிக் காரணம் என்ன ?
21. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை ?
22. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்களைக் குறிப்பிடு
23. பொருளாதார பெருமந்தம் தோன்றக் காரணங்கள் என்ன ?

பகுதி – II

24. இன ஒதுக்கல் கொள்கை பற்றி ஒரு குறிப்பு வரைக.
25. ஜனநாயகம் பற்றி ஆபிரகாம் லிங்கனின் கருத்தை எழுதுக.

பகுதி – III

26. இந்தியாவின் வடக்கு மலையிலுள்ள இரண்டு முக்கிய புனித தலங்களை குறிப்பிடு
27. இந்தியக் காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகளின் பெயர்களை எழுதுக.
28. பருவக்காற்று என்பதன் பொருள் யாது ?
29. செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள் யாவை ?

(திருப்புக

30. தினைவகைப் பயிர்கள் எங்கு ஏன் பயிரிடப்படுகின்றன ?
31. பருத்தி விளையும் இடங்களைக் கூறுக.
32. உற்பத்தி - வரையறு.
33. வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகளின் ஏதேனும் நான்கு அம்சங்களைக் குறிப்பிடுக.

பகுதி – IV

34. தலையிடாக் கொள்கை சிறுகுறிப்பு வரைக.
35. தலா வருமானம் என்றால் என்ன ?

பிரிவு – III (மதிப்பெண்கள் : 8)

குறிப்பு : ஏதேனும் நான்கினை வேறுபடுத்திக் காட்டுக : 4 × 2=8

36. கிரீன்வீச் நீக்க நேரம் - இந்தியத் திட்ட நேரம்
37. இமய மலையில் உருவாகும் ஆறுகள் - தீபகற்ப ஆறுகள்
38. தென்மேற்கு பருவக்காற்று மற்றும் வடகிழக்கு பருவக்காற்று
39. லூ - நார்வெஸ்டர்ஸ்
40. புதுப்பிக்கக்கூடிய வளம் மற்றும் புதுப்பிக்க முடியாத வளம்
41. காரீஃப் மற்றும் ராபி பயிர்கள்
42. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
43. வெப்பமண்டல பசுமை மாறாக்காடுகள் மற்றும் வெப்பமண்டல பருவக்காற்றுக் காடுகள்

பிரிவு – IV (மதிப்பெண்கள் : 8)

குறிப்பு : கீழ்கண்ட தலைப்புகளில் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2 × 4=8

44. பிளாசி மற்றும் பக்சார் போர்
அ) 1757ஆம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார் ?
ஆ) துணைப்படைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் யார் ?
இ) டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது ?
ஈ) விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது ?

45. போரின் போக்கு
அ) முதல் உலகப்போரின் காலம் என்ன ? ஆ) மைய நாடுகள் யாவை ?
இ) நேச நாடுகள் யாவை ? ஈ) போரில் உபயோகப்படுத்தப்பட்ட போர்க்கருவிகள் யாவை?

46. அடால்ஃப் ஹிட்லர்
அ) அடால்ஃப் ஹிட்லர் எங்கு பிறந்தார்? ஆ) அவரின் தந்தையின் தொழில் என்ன?
இ) ஹிட்லர் எதனை தோற்றுவித்தார்? ஈ) ஹிட்லர் எழுதிய புத்தகத்தின் பெயர் என்ன?

47. ஐரோப்பிய ஒன்றியத்தின் சாதனைகள்
அ) ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயத்தின் குறியீடு என்ன ?
ஆ) ஐரோப்பிய ஒற்றை நாணயம் எதை களைகிறது ?
இ) ஐரோப்பிய ஒன்றியத்தில் தற்போது எத்தனை உறுப்பு நாடுகள் உள்ளன?
ஈ) ஐரோப்பிய ஒன்றிய ஆராய்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கும் அமைப்பது எது?

பிரிவு – V (மதிப்பெண்கள் : 20)

ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றினைத் தேர்வு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். 4 × 5=20

பகுதி-I

48. அ) ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை ?
ஆ) பிராங்களின்-டி-ரூஸ்வெல்ட் அறிவித்த நிவாரணம், புனரமைப்பு மற்றும் சீர்திருத்தங்கள் பற்றி விரிவான விடையளி. (அல்லது)
இ) இரண்டாம் உலகப்போர் ஏற்படக் காரணங்களில் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக

பகுதி-II

49. அ) பஞ்சசீலம் மற்றும் அணிசேராக் கொள்கை பற்றி எழுதுக. (அல்லது)
ஆ) தேர்தல் முறையைப் பற்றி குறிப்பிட்டு அவற்றைப் பற்றி விளக்கம் தருக. (அல்லது)
இ) ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பங்கினை விளக்குக.

பகுதி-III

50. அ) இமய மலைகள் உருவான விதத்தினை விவரி. (அல்லது)
ஆ) மழைநீர் சேகரிப்பினை விளக்குக. (அல்லது)
இ) இந்திய வேளாண் தொழிலில் உள்ள ஏதேனும் மூன்று பிரச்சினைகளை விவரி.

பகுதி-IV

51. அ) நலம் நாடும் அரசுகளின் பணிகளை விவரி. (அல்லது)
ஆ) நாட்டு வருமானத்தை அறிவதன் அவசியம் யாது ? (அல்லது)
இ) நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துகளை விவரி.

குறிப்பு : பார்வையற்ற மாணவர்கள் வரைபடத்தில் குறிப்பிட்டுக் காட்டுவதற்குப் பதில் அவ்விடங்களைப் பற்றிய குறிப்புகள் மட்டும் எழுதவேண்டும். மற்றும் காலக்கோட்டிற்கும் அவ்வாறே குறிப்புகள் மட்டும் எழுத வேண்டும்

பிரிவு – VI (மதிப்பெண்கள் : 5)

குறிப்பு : கீழ்கண்டவற்றிற்கு காலக்கோடு வரைக : 5

52. 1900 - 1940 காலக்கோடு வரைந்து வரலாற்றின் முக்கிய நிகழ்வுகளை வரையவும்

பிரிவு – VII (மதிப்பெணகள் : 15) (வரைபட வினாக்கள்)

53. அ) கீழ்காணும் இடங்களை ஆசிய வரைபடத்தில் குறி : 5
1. ஜப்பான் 2.பீகிங் 3. பார்மோசா 4. ஹாங்காங் 5. மலேசியா (அல்லது)
ஆ) ஐரோப்பா வரைபடத்தில் கீழ்கண்டவற்றை குறிக்கவும் :
1. ஜட்லாந்து 2. டான்சிக் 3. ஜெர்மனி 4. மார்ன் நதி 5. பெல்ஜியம்

54. கீழ்க்காணும் இடங்களில் ஏதேனும் பத்து மட்டும் இந்திய வரைபடத்தில் குறிக்கவும் 10
1. எவரெஸ்ட் சிகரம் 2. பாக நீரிணைப்பு 3. கங்கை நதி
4. காரக்கோரம் மலைத் தொடர் 5. சோட்டாநாகபுரி பீடபூமி 6. காம்பே வளைகுடா
7. தேயிலை விளையும் பகுதி ஒன்று 8. தென்மேற்குப் பருவக்காற்று வீசும் திசை
9. சென்னை 10. ஜாம்ஷெட்பூர் 11. கோதுமை விளையும் பகுதி ஒன்று
12. பருத்தி நெசவுத் தொழில் நடைபெறும் இடம் ஒன்று 13. அதிக மழைபெறும் பகுதி ஒன்று 14. நிலக்கரி கிடைக்கும் பகுதி ஒன்று 15. சுந்தரவனம்